* * *

புகலூர்—சிற்றூர்க் கிளை

புகலூர், டிச. 6 — 1-12-49-ல் இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—புகலூர் (சர்க்கரை ஆலை) சிற்றூர்க் கிளை" திறக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- கே. கே. சாமி, துணைச்செயலாளர்-ஏ.முத்துசாமி; நிதி உறுப்பினர்- கே. சுப்பிரமணியன்; விளம்பர உறுப்பினர்- டி. வி. வடிவேலு. செயற்குழு உறுப்பினர்கள்— கே. முத்துகிருஷ்ணன், பி. நலலசாமி, பி. எஸ். தண்டபாணி, டி. பாலகிருஷ்ணன் எல. க. அப்துல்காதர், எம். பழனியாண்டி, டி. ஆர். முத்துசாமி, எம. சின்னமலை, ஜி. சின்னுசாமி. (செ-ர்)

* * *

கொடைக்கானல்-நகரக்கிளை

கொடைக்கானல், டிச. 1— இவ்வூர் திராவிடர்கழகச் செயற்குழு கூட்டம், 28-11-49 அன்று தோழர் எஸ். ஈ. அப்துல்காதர் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான இளைஞர்கள் தோழர்கள் கூட்டத்தின் முடிவைக் காண வந்திருந்தனர். மாலை 3 மணிக்கு கூட்டம் ஆரம்பித்தது. பெரியாரின் திருமணத்திற்குப் பின் இதுவே முதற்கூட்டம். தோழர் எஸ். ஈ. அப்துல் காதர் பெரியாரின் பொருந்தா மணத்தைக் குறித்து பேசியபின், பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவால (ஒட்டுமொத்த) இந்த திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—கொடைக்கானல் நகரக்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். ஈ. அப்துல் காதர்; பொருள் உறுப்பினர்:- அழகர்சாமி, விளம்பர உறுப்பினர்: ஆர். ஜெ ச தம்புசாமி. பின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம, அதன் நடைமுறை ஆகியவற்றை பற்றி தோழர் எம. கே. ஏ. நீண்டநேரம் பேசினார். இறுதியாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது. (வி. உ)

* * *

அங்கலக்குறிச்சி-சிற்றூர்க்கிளை

அங்கலக்குறிச்சி, டிச. 1— 30-11-49 அன்று, மாலை பொள்ளாச்சி தோழர் பி. என். இராமலிங்கம் அவர்கள் தலைமையில், தி. மு. க. ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெற்றது. பின்பு, "திராவிட முன்னேற்றக் கழகம் அங்கலக்குறிச்சி சிற்றூர்க்கிளை" திறக்கப்பட்டது. பின்பு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஏ. சி. மயில்சாமி, துணைச்செயலாளர்:- ஏ. எம். …ராம, நிதி உறுப்பினர்:- ஏ. எம. காளிமுத்து, விளம்பர உறுப்பினர்: எ. டி. ரஞ்சப்பன்-செயற்குழு உறுப்பினர்கள்:- எ. எம மாணிக்கம், எ. கே. பொன்னுசாமி, எ. எஸ். மைதீன்பாட்சா, எ. எஸ் காஜாமைதீன், எ எஸ். நாச்சியப்பா எ. ஜே. காதர்பாட்சா, எ.எஸ். நடராஜன்.

* *

ஆறகளூர்—சிற்றூர்க்கிளை

ஆறகளூர் (சே. மா) டிச, 6— இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 4—12—49ல் தோழர் கே. ஆழ்வார் அவர்கள் சிற்றுண்டி நிலையத்தில், தோழர் எ. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அது போது, "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆறகளூர் சிற்றூர்க்கிளை" திறக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-டி. கே. ஆழ்வார், துணைச் செயலாளர்-கே. கே. சிதம்பரம், பொருள் உறுப்பினர்-எ. எம. செல்லமுத்து, விளம்பரஉறுப்பினர் எஸ். ஆர்.செங்குட்டுவன். செயற்குழுஉறுப்பினர்கள்-எம் எம். எ.ஜீவாவுதீன், எம். சக்திவேல், பி. வெங்கடாசலம், டி. சி. காமராதன், எம். கே. அய்யாக்கண்ணு.

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* *

பாலூர்சத்திரம்—சிற்றூர்க்கிளை

பாலூர்சத்திரம், டிச. 6— இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 4—12—49-ல் தோழர் நடராச் கண்ணு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—பாலூர் சத்திரம் சிற்றூர்க்கிளை" திறக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—லோகநாத பாண்டியன்; துணைச்செயலாளர்- சீனிவாசக-; பொருள் உறுப்பினர்- தேவதாஸ் செல்லத்துரை; விளம்பர உறுப்பினர்- சி. நடராசன் செயற்குழுவினர்— நா.தங்கையா, வெள்ளைச்சாமி, தங்கசாமி, வே. செல்லக்கனி, தங்கையா எஸ் மாடசாமி, தங் ரத்தினசாமி, அலாவிச்சை, நா. குத்தாலலிங்கம், அ. நாடாக்கண்ணு. (வி-உ,)

* *

மணலூர்ப்பேட்டை-சிற்றூர்க்கிளை

மணலூர்ப்பேட்டை, டிச. 7— இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 6—12—49-ல் தோழர் எஸ். கோவிந்தசாமி தலைமையில் தோழர் எ. பெருமாள் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தசாமி, துரைசாமி, ஆகியோர் தி. மு. க.அவசியத்தைக் குறித்துப் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்— மணலூர்ப்பேட்டை சிற்றூர்க் கிளை" திறக்கப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- அ. துரைசாமி; துணைச்செயலாளர்- கே. சி. தண்டபாணி; பொருள் உறுப்பினர்- வி. எ. பெருமாள்; விளம்பர உறுப்பினர்— எஸ். பழனி, செயற்குழுவினர்கள்:— என். ராஜி, அ. கண்ணன், எஸ் சுப்பிரமணி, என். அண்ணாமலை, எ. பி. சின்னராஜி, எ. பி. கோவிந்தன், எ. பி. ராஜாம்பாள், டி. சலுர்தலை, டி. சொக்கலிங்கம், எ. தண்டபாணி, எஸ். சுந்தசாமி. மேலும் சில செயற்குழு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (வி.உ)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"மாலை மணி" சென்னை

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

அனந்தப்பூர்

அனந்தப்பூர், டிச. 13— அனந்தப்பூர்-தி. மு. க. நகரக் கிளையின் சார்பாக 11-12-49-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30- மணிக்கு, புதூர் பீஸ் மெமோரியல் ஹாலுக்கு அருகிலமைந்த மைதானத்தில், ஓர் பொதுக்கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எம். கிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார். திராவிடத்தின் பொருளாதார சீர்குலைவு பற்றி விளக்கினர், தோழர்கள் ஜே. பி. ஐஸக், என. வி. குமாரசாமி, எஸ. கந்தசாமி, எம். என ராகின் முதலியோர். தேசியத்தின் பெயரால் நடக்கும் வடநாட்டுச் சுரண்டல் முறை, காங்கிரஸ் சபையினராகிய பலர் செய்யும் பகற்கொள்ளை, பதவி வேட்டை, லஞ்சம் ஊழல், கடவுளின் பெயரால பல கோடி ரூபாய் பாழாகும் விதம், சென்னை அரசாங்கத்தார் செய்யும் முன்னேற்றம் காண முடியாத குடிசைத் தொழில் பற்றியும், பிரகாசம் அபிவிருத்தித் திட்டத்தால் பணம் பாழ்படும் விதத்தையும், மத்திய ஆட்சியாளர்களின் நாணய மதிப்புக் குறைவால் ஏற்பட்டு வரும் இன்னல்கள், அயல்நாட்டுத் தூதுவர்களின் ஆடம்பரச்செலவும், பொதுவுடைமையின் உயர்ந்த திட்டங்கள் பற்றியும் விளக்கமாக தக்க சான்றுகளோடு பேசி, தொடர்ந்து நம இலட்சியங்கள் நிறைவேற பொதுவுடைமையும், தனித்திராவிடமும் காணுவதற்கு தி. மு. கவில சேர்ந்து பணி செய்ய வேண்டுமென வற்புறுத்திப் பேசினார்கள். இக்கூட்டத்தில கேரள, ஆந்திரத் தோழர்களும் பெரும்பான்மையோர் கலந்து கொண்டனர். கடைசியாக தோழர் குமாரசாமி நன்றி நவின்ற பின் 7½- மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

காங்கயம்

காங்கயம், டிச. 13— 12—12—49 திங்கள் மாலை 6-மணிக்கு, காங்கயம், புதிய சினிமா கொட்டகையில, கொங்கார்பாளையம், தோழர் குமாரசாமி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒலிபெருக்கி அமைக்கப் பட்டிருந்தது. சந்தை நாளாக இருந்தபடியால் பொதுமக்களும், மாணவர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் வா. வெ. முத்தையாலு அவர்கள், சிறிது நேரம் தி. மு. கழகத்தின் நோக்கத்தைக் குறித்துப் பேசினார். பின்னர், தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள், ஒரு விரிவான சொற்பொழிவாற்றினார்.

அவர் தமது சொற்பொழிவில், இன்று, ஏழை உழவர்களும், தொழிலாளர்களும், கைத்தறி நெசவாளரும், மற்றும் பலதுறை உழைப்பாளரும் வறுமைக்கும், பசிக்கும், பட்டினிக்கும் ஆளாகித் துன்பப்படுவதையும், அரசாங்கத்தாரின் போக்கு, ஜமீன்தாரருக்கு எவ்வளவு நஷ்டஈடு தாராளமாகத் தரலாம், முதலாளிகளின் கொள்ளை இலாபத்தை எப்படி விட்டு வைக்கலாம், கோடீஸ்வரர்களுக்கு என்னென்ன சலுகை காட்டலாம், அடுத்த தேர்தலிலே வெற்றிபெற இப்பொழுதே காங்கிரஸ்காரர்களுக்கு என்னென்ன வசதி செய்துகொள்ளலாம், உழவர்களை எப்படி மடக்கலாம், தொழிலாளர்களை எப்படி வாயடைக்கலாம், என்பதாக இருப்பதையும், நாட்டிலே, ஏழை மக்களுக்கோ, வைத்தியத்துக்கு வசதியில்லை, கல்விக்கோ வழியில்லை, குந்த குடிசைக்கே இடமில்லை, அரைக்குக் கந்தையுமில்லை, அரைவயிற்றுக் கூழுக்கும் நிச்சயமில்லை, ஆனால்ஆளவந்தவர்களுக்கோ, அவர்களால் அனுப்பப்படும் தூதுவர்களுக்கோ ஆடம்பர வாழ்வுக்குக் குறைவில்லை. வீண் செலவுக்கோ எல்லை இல்லை என்பதையும், வரிகள் வளர்ந்தபடி இருக்க, வாழ்க்கை வசதியோ குறைந்தபடி இருப்பதையும், மாகாண சர்க்கார்—எந்தப் புது திட்டத்தையும் நிறைவேற்ற கையாலாகாது இருப்பதையும், மத்திய சர்க்காரோ இராணுவத்தைக் கவனிக்கும் அளவுகூட மக்கள் வாழ்க்கையைக் கவனிக்காமல் இருப்பதையும், வடநாட்டார்கள் தமது அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டு, தென்னாட்டைத் தமது வியாபாரத்திற்கு மார்க்கெட் ஆக்கிச் சுரண்டுவதோடு தென்னாட்டை வாழவிடுவதில்லை என்பதையும், மற்றும் திராவிடநாடு பிரிய வேண்டிய, தனி யுரிமை எய்த வேண்டும் என்பதற்குரிய காரணங்களையும் விளக்கி, சுமார் 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் தமது முடிவுரையில், தி. மு. கழகத்தில் சேர்ந்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டபின், செயலாளர் தோழர் முத்தையாலு நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

தக்கோலம்

தக்கோலம், டிச 8— இவ்வூர் தி. மு. க. துவக்க விழாக்கூட்டம் நேற்று மாலை மிகச் சிறப்புற நடந்தேறியது. சுற்றுவட்ட கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தனர். கூட்டம் மாலை 6-30 மணிக்குத் துவக்கப்பட்டது. துவக்கத் தோழர் ஒருவர் பாட்டு இசைத்தார். கூட்டத்திற்கு சென்னை நகரசபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமை வகித்தார். தி. மு. க. நோக்கம், கொள்கை, திட்டம் ஆகியவை பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் தோழர்கள் கே. ஏ. மதியழகன், இரா. செழியன் ஆகிய இருவரும் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவெய்தியது.

மிதக்கும் பாலம்!

அமெரிக்காவில் ஆறுகளைக் கடக்கப் பயன்படுத்தப்பெறும் மாபெரும் மிதக்கும் பாலங்கள் சிலவற்றுள் படத்தில் காணப்படுவதும் ஒன்றாகும். கான்கிரீட்டினால் செய்யப்பட்ட (உள் குடைவான) அடிக் குடைகள் இப் பாலத்தினை மேற்கி நிற்கின்றன. வாஷிங்டன் எரியில் மிதக்கவிடப்பட்டுள்ள இப் பாலம் 7 800 அடி நீளமுடையதாகும். பு. எ பகிர்க்கரையிலுள்ள சிட்டில் நகரையும் மொஸர் நீலையும் இப் பாலம் இணைக்கிறது. இதனைக் கட்டி முடிக்க 6,000,000 பவன் செலவாயிருக்கும். இதனைப் பயன் படுத்தும் மோட்டார் சொந்தக்காரர்களிடமிருந்து மட்டும் கட்ட 9 ஆண்டுகளில் (சுமார்) வரி வசூலித்த தில் மேற்படி தொகையைச் சரிகட்டிவிடலாம். வாஷிங்டன் எரி மிக மிக ஆழமுள்ளதாகையால், நிரந்தரமான பாலம் கட்டுவதனால் மிகுந்த செலவாகுமெனக் கருதி, இம் மிதக்கும் பாலத்தைக் கட்டி முடித்தனர். உள்ளே குடைப்பெற்ற தண்ணீரின் மேற் பகுதியில் சிற்சில 65 டன் எடையுள்ள ஐயாதாரணமிரீட் 'கடைகள்' இப் பாலத்தைத் தாங்குகின்றன. இக் 'கட்டை'களுள் சில எரிக்கரை யோடு சேர்த்து நகைக்கும் பாலமைக்கப்பட்டிருக்கின்றன.

நூல் நிலையங்கள் பகுத்தறிவுக் களஞ்சியங்களாகவேண்டும்

மக்களை சிந்திக்க வைப்பதே எழுத்தாளர் கடன்

கோவையில் தி.மு.க. தோழர்கள் பேச்சு

கோவை, டிச. 15—

கோவை, 11—12—49 ஞாயிறு காலை 9-30 மணிக்கு எடிசன் தியேட்டரில் நியாராயர் படிப்பக முதலாண்டு நிறைவு விழா, தோழர் கு. அடைபழகன் எம். ஏ., அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொது மக்களும், தாய்மார்களும் நிறைந்திருந்தனர். வாயிலில் தி. மு. கழகக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

புலவர், சுந்தரராசனார் அவர்கள், திராவிட நாட்டுப் பண்பாடியன்ன, தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் அவர்கள் முன்மொழிய, தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழிமொழிய, தோழர் அன்பழகன் அவர்களை தலைமை யேற்று, தமது முன்னுரையில், தியாகராயர் திராவிட மக்களை முதல் முதல் கட்டி எழுப்பிய வரென்றும், அவருடைய கருத்துக்களின் வளர்ச்சிய, இன்றைய திராவிட மக்களின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளும், அரசியல் கோட்பாடுகளுமாகு மென்றும், அத்தகைய பெரியாரின் பெயரால் படிப்பகம் நடத்துவது மிகவும் சிறப்புடையதாகும் எனவும் கூறினார்.

அடுத்து தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

டி. கே. சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், புத்தக நிலையம் ஒரு பஞ்சோலி எனவும், அதை நாடும் வகைகள் பலவென்றும், நமது பகுத்தறிவை மழுங்கச் செய்து விடுபடலில் கொள்கையென்றும், அவர்களை அறிவு திறக்கவே, சுயமரியாதை இயக்கம் பாடுபட்டதென்றும் இன்று அந்த நோக்கத்தோடு கூடிய தகுதியுள்ள இளைஞர்களெல்லாம் தி. மு. கழகத்தின் மூலம் பணியாற்றுகிறோம் என்றும், நியாகராயர் தோற்றுவித்த இயக்கம் வளர, கொள்கை பரவ இத்தகைய படிப்பகத்தைப் போது மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும், விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்.

க. அன்பழகன்

அதன் பின் தோழர் க. அன்பழகன் அவர்கள், தமது முடிவுரையில், நியாகராயர் கருத்துக்களை விளக்கியும், அவரால் கேட்கப்பட்ட வகுப்பு நீதியையும், இன்றைய வகுப்பு உரிமைகளின் போக்கையும் விளக்கிச் சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினார். இறுதியாக செயலாளர் நன்றி கூறின பின பகல் 1 மணிக்கு விழா இனிது முடிந்தது.

சென்னையிலிருந்து தோழர் க. அன்பழகனும், திருச்சியிலிருந்து சனிவாசனும், விருதுநகரிலிருந்து ஆசைத் தம்பியும் அன்று காலை வந்து சேர்ந்தபோது, கோவை நியதிகள் தோழர்கள் படடிலிங்கம், பக்கிரி சாமி ஆகியோர் வரவேற்றனர். தோழர்களுக்கு தோழர் படடிலிங்கம் அவர்கள் இலவத்தல விருந்தளிக்கப்பட்டது. (வ—உ)

குருடர்கள் படிக்கக் கற்க புதுமுறை

பாரிஸ், டிச. 15—

குருடர்கள் வாசகை மூலம் எளிதில் படிக்கவும், படிக்கவும் தக்க புதிய முறையை கோட்டோ லைபாம் பூதா என்ற இந்த கண்டுபிடித்திருக்கிறார். இம் முறையைப்பற்றி பாரிஸில் செய்ய பூனெகோ நிலையக் காரியாலயத்தில் சர்வதேச வல்லுநர்போ வாலைமுகப்பட்டிருக்கிறார். —பூனேம

போகிற போக்கில்...!

'மூஷ்டி மீது ஐ கடாகாணை வைனா துவேஷம்'
— செய்தித் தலைப்பு

கேஷ்டி வறட்சி செய்யும் கடைகளின் முழுப் பதிலியல செயலும் 'சாதவீச' நாயகத்தைக் கவனாது தடுங்குத தொலைத்துவிடுவார், கலைவெனறுமாய, ஆமதாபாத் மில் முதலாளிகள் கலங்குகிறார்களாம்!

* * *

'இதியில சதியம் கலெலும்''
— ஷேக் அப்துல்லா

அந்த இறுதிக காலதாதை பதாபாதுதான இது நாள வரை இருந்து வருகிறோம் பரபரம்ம எனகிறார் நம் ளா பொதுமக்கள!

* * *

'வெட்டிப் பேச்சை நிறுத்தி யிட்டு வேலையிலறங்குங்கள
— பண்டிதநேரு

வதநியரே, முதலில உங்ள வயாதிலையக் குணபடுத்தி கொளுங்கள!

* * *

'இந்திய கோணிப் பைவியாதில யு. எஸ். சரதை'
— செயதித் தலைப்பு

டாலரை மூடைக கட்டி அனுபபவைகவா?'

* * *

அமெரிக்காவுக்கு இரு யாணக்குடிகள: வசஷ விமானதல அனுபபபடும
— செய்தித் தலைப்பு

ய கோக்குட்டிகளை அனுப்பு வத விசஷ்'காயந்தானே! அறியும, இரணடு யானைக் குட்டிகளை யேற்றிச செலலும் விமானம் 'சொறப' விமான மகா இருகுமே!

* * *

'ஒரு ஸ்தரியை மோற்றி அழுதது வதாக 4 பேர் மை''
— செயதித் தலைப்பு

ஒரே ஒரு ஸ்தரியை மடடும் மறறனர எனபதறகாகவா?

* * *

"கைக் குத்தல் அரிசிக்கு ஆதரவு"
—செய்தித் தலைப்பு

அதிக வேடடுகளை தானே டைகுமோ? எதுதாது நீன ருல குத்தி (!) அரிசி மண வவ மவணடியதுதான!

* * *

சென்னைச் சர்க்கார் தணைச் செயலாளர மறைவு!
—செய்தி தலைப்பு

இரண்டுவார காலமாக அவரைக காணவிலலையனறு படடுமம தான இதறகு மூன செயதி கிடைததது கிறது!

பாலமமண்ட முன்பு நடந்த காலதனம: டிலலி காங்கிரஸ கமிடடியன கணடனம'

மலல காவம, அகில இந்திய காங்கிரஸ கமிடடிககு மேலே யிலலாமற போயறறு!

தோழர் என். வி. நடராசன்

நா. மு. க. நலலமை நலல அமைபபுக குழுச செயலாளராகிய எ. வ. எ. 14, 15 தீ நாளகளில தாதகுடி— மறறை மனைத பதிபப ழுதி வாடகைகள பறறி அவரகளுடன அறிந்த கரை மேடி டனுடன கலநது பிரசிடி, 14-ந தத நிருசசியில வாதச செயலாளர அணைதது அவரை சநததுடன 15-ந தத சென்னை சநதார.

ஜமீன்தார்கட்கு 'தலைட'த் தொகை

முற்கூட்டியே தர சருத்த மசோதா

ஜமீனதாரி ஒழிபபுச சடட (19 6) திருததமசோதாவொனறை சென்ன சடடசசபை வெளிடடனை னர. ஜமீனதாரடமுள்ள வஷ்ட நடதை தொகையில ஒருகுறி முனகூடடியதாகுதாரனஷ்டத்த ன போல வருகபபடிகும் மறற நமமசாதா.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

17—12—49

மணப்பாறை:— இராமமிர்தத்தம்மையார், டி. கே. சீனிவாசன், எஸ். நெடுமாறன.

காவேரிப்பாக்கம்:— இரா. நெடுஞ்செழியன, வி. முனுசாமி.

கனப்பூர்:— புலவர் கோவிந்தன் பி. ஓ. எல்.

18—12—49

பவானி:— ந. வி. கே. சம்பத், கே. ஆர். ராமசாமி.

சிவகங்கை:— டி.கே. சீனிவாசன், சி.பி சிற்றரசு.

கோவை:— என. வி. நடராசன, பி. பழனிச்சாமி.

குளத்தூர்:— ஏ. சிததையன், மு. கருணாநிதி.

19—12—49

மேட்டுப்பாளையம் (நீருச்சி):—என். வி. நடராசன்.

பட்டிவீரனபட்டி:— எஸ். அப்பாவு, எம். அய்யாசாமி, எஸ். முதது, கே. நடராசன.

தமது கண்மூடிப் பழக்கங்களிலிருந்து விடுபடலில் கொள்கையென்றும், அவர்களை அறிவு திறக்கவே, சுயமரியாதை இயக்கம் பாடுபட்டதென்றும் இன்று அந்த நோக்கத்தோடு கூடிய தகுதியுள்ள இளைஞர்களெல்லாம் தி. மு. கழகத்தின் மூலம் பணியாற்றுகிறோம் என்றும், நியாகராயர் தோற்றுவித்த இயக்கம் வளர, கொள்கை பரவ இத்தகைய படிப்பகத்தைப் போது மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும், விளக்கமாகச் சொற்பொழிவாற்றினர்.

க. அன்பழகன்

அதன் பின் தோழர் க. அன்பழகன் அவர்கள், தமது முடிவுரையில், நியாகராயர் கருத்துக்களை விளக்கியும், அவரால் கேட்கப்பட்ட வகுப்பு நீதியையும், இன்றைய வகுப்பு உரிமைகளின் போக்கையும் விளக்கிச் சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினர். இறுதியாக செயலாளர் நன்றி கூறின பின பகல் 1 மணிக்கு விழா இனிது முடிந்தது.

சென்னையிலிருந்து தோழர் க. அன்பழகனும், திருச்சியிலிருந்து சனிவாசனும், விருதுநகரிலிருந்து ஆசைத் தம்பியும் அன்று காலை வந்து சேர்ந்தபோது, கோவை நியதிகள் தோழர்கள் படடிலிங்கம், பக்கிரி சாமி ஆகியோர் வரவேற்றனர். தோழர்களுக்கு தோழர் படடிலிங்கம் அவர்கள் இலவத்தல விருந்தளிக்கப்பட்டது. (வ—உ)

குருடர்கள் படிக்கக் கற்க புதுமுறை

பாரிஸ், டிச. 15—

குருடர்கள் வாசகை மூலம் எளிதில் படிக்கவும், படிக்கவும் தக்க புதிய முறையை கோட்டோ லைபாம் பூதா என்ற இந்த கண்டுபிடித்திருக்கிறார். இம் முறையைப்பற்றி பாரிஸில் செய்ய பூனெகோ நிலையக் காரியாலயத்தில் சர்வதேச வல்லுநர்போ வாலைமுகப்பட்டிருக்கிறார். —பூனேம

அல்லாடியாரின் ஆரிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிக்கொண்டிருக்கிற நேரத்தில் இதுபோன்ற பிற்போக்கு-பிற்தலாட்டக் கருத்துக்கு வேத பரம்பரை வழி வந்த அல்லாடியாருக்கு என்ன அகம்பாவமென்று யாருக்கும் கேட்கத் தோன்றுமே. பிற்போக்கு அறிவு சுடர்விட்டொளி செய்யும் இவ்விருபதாம் நூற்றாண்டில், பிற்போக்கு சக்திகளெல்லாம் மூலையிலடங்கியொடுங்கி முன்னேற்றக் கொள்கைகளுக்கு வழி விடுவது தவிர வேறு வகையில்லையென்பதை உணரத்தொடங்கிவிட்ட இவ்வறிவுக் காலத்தில், அல்லாடியார் மனுதர்மத்தை நிலை நாட்டப் பார்க்கிறார், அறிவைத்திருடப் பார்க்கிறார், அநியாயத்தை நிறுவப் பார்க்கிறார். அக்கிரமத்தை அரசேற்றப் பார்க்கிறார் அல்லாடியாரென்றே அறிவுடைச் சமூதாயம் கூறும். மார்க்ஸியம் பேசப்படும் காலத்தில், மாசேதுங் அதிக்கக் காலத்தில் மனு நீதிக்குப் பரிந்து பேசும் இக்கட்டிலுள்ள 'மனுஸ்மிரேஷ்டர்' கடைந்தெடுத்த வஞ்சக வுலகை சிருஷ்டிக்க முனைகிறாரென்பதில் ஐயந்திரிபுற நிரூபணமாகிவிட்டதென்றே கூறுகிறோம். அறிவாராய்ச்சிக்கு சமாதிகட்ட வேண்டுமென்று கூறிய அல்லாடியார், ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாதென்பதற்காக, பழைய சம்பிரதாயங்களைப் பலியிடுவதற்கென ஆத்திரப்படுகிறார். ஒரு குடும்பத்தில், ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஆணுக்கு பெண்ணுக்கும் சரிசம அந்தஸ்து இருக்கவேண்டுமென்று கூறுவது எந்த வகையில் 'ரை பட்டதாகும் என்று கேட்கிறோம்? ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்கும் உளுத்துப் போன 'ஆரியமத உபாத்யானம்' இன்னும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவர வேண்டுமாவென்று கேட்கிறோம். பெற்ற வளர்த்த தகப்பனை சம்பாதித்து வைத்திருக்கும் சொத்தில், பிள்ளையைப் போலவே பெண்ணுக்கும் உரிமையுண்டு என்று கூறி, பெண்களையும் சொத்துரிமையுடையோராக்கி தன்னம்பிக்கை கொண்டு நிமிர சட்டம் செய்வதில் என்ன தீங்கும், தொல்லையும் வந்துவிடப் போகிறதெனக் கேட்கிறோம். ஆண்டாண்டு காலமாகச் சுரண்டி செய்துவரும் அனியாயத்தைக் கண்ணை மூன்வருவது அக்கிரமமென்கிறாரா, அல்லாடியார் எனக் கேட்கிறோம்.

பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கிவிட்டால், ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஆண், பெண்களுக்கிடையே (சகோதர—சகோதரிகளுக்கிடையே) அன்பு நீடிக்கும், தகராறும் பொச்சரிப்பும் வளருமென்கிறார் அல்லாடியார். சட்டவல்லுநரான இது வென்ன தெரியாதா? தங்களுக்கு சொத்தில் ஒருபகுதி கொடுத்துவிட்டால், அண்ணனுக்கு ஆத்திரமாய் வந்துவிடுமா? இல்லை அவரின் சகோதர-சகோதரிகளுக்கிடையில் அன்பு நிலவுவதற்குக் காரணமே, சொத்தில் பங்கு கேட்காது, கணவன் வீடு போய் விடுவதுதானா வென்று கேட்கிறோம். உடன்பிறப்பாளர்களிடையே அத்துணை மோசமான மனப்போக்கு இருக்க முடியுமா? அல்லாடியார் கூற்றை வாதத்துக்காக ஏற்றுக்கொள்வோம். அண்ணன், தம்பி இருவர்கள் தங்கள் தந்தை சொத்தைப் பகிர்ந்துகொண்ட பிறகு அன்பற்ற மரக்கட்டைகளாகவா திகழ்கின்றனர்? அன்பர்றுதான் பிரிந்துபோய் விடுகிறார்களென அல்லாடியார் கூறுவாரேயானால், சொத்து காரணமாக அவர்களிடையில்மட்டும் தகராறு மனோபாவம் வரலாமாவென்று கேட்கிறோம்! உடன்பிறந்த அவர்களுக்குள் மட்டும் தகராறு வரலாமென்று அல்லாடியாரின் சட்ட புத்தகம் கழறுமேல். அண்ணன்—தம்பிகளிடையே அன்பு குறைந்துபோய் விட்டால் தான் என்ன குடி முழுகிப் போய்விடுமெனக் கேட்கிறோம். சொத்து காரணமாக முளைக்கும், அல்லது இல்லாதொழியும் அன்புக்கு அன்பென்றுபெயர்வியாபாரமென்றால் சானே பொருந்தும்? பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்துவிட்டால்; பிள்ளைப் பேற்றுக்கு அவர்களுக்கு தாய்வீடு வர முடியாதெனத் திகிடு தத்தம் வாதம் புரிகிறார் அல்லாடியார்! இப்பொழுதற்ற வரட்டு வாதத்தைப் பிள்ளைகள் கேட்டால்கூட சிரிக்குமே! பிள்ளைப் பேற்றுக்குத் தாய்வீடு போகமுடியாதெனபதற்காக, பிறப்புரிமையில் ஒரு அம்மாகிய சொத்துரிமையை இழந்துவிட முடியுமா ஒரு பெண் என்று கேட்கிறோம்? தாய் வீடு போவதற்கு தனது கணவன் வீட்டிலேயே பிள்ளைப்பேற்றை நடத்திவைக்க என்ன மாபாதகம் வந்து சூழ்ந்து விடுமெனக் கேட்கிறோம். அறிவும் ஆற்பத்திகளும் பெருகிவரும் இந்நாளில், அல்லாடியாரின் இப்'பிள்ளைப் பேற்று விஷவாதம்' கவைக்குதவா கருத்தற்றவாதமே யென்பதற்கு இன்னுமா விளக்கம் வேண்டும்?

இந்துசமூதாயக் கோட்பாடுகள் சீரழிந்துவிடும், சட்டம் செய்வதில் சர்க்கார், மக்களது (மத) உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென சிறுகிறார் அல்லாடியார். எடுத்துப் படியும் நாம் இந்துக்களாயிற்றே, பெண்களுக்குச் சொத்துரிமைவழங்குவதுமுதலான ஷரத்துக்களை மாற்றிவிடுங்களென ஆணை பிறப்பிக்கிறார் 'பிராமணர்களாகமா'! இந்து சமுதாயச் சீர்திருத்தம் சம்பந்தமாக 19-ம் நூற்றாண்டு ஆரம்பகாலமுதல எத்தனைச் சட்டங்கள் உருவாகி அமுல் செய்யப்பட்டிருக்கின்றன! அதனால் இந்து மதச் சக்கரையின் நாற்றம் சிறுக சிறுக குறையவில்லையாயிற்றே. அதுதவிர, அல்லாடியார் கூறுவதுபோல களங்கமோ அசுத்தமாவதோ நேரிட்டதாகக் கூறமுடியுமா? இந்து மதத்தின் புனிதத்தன்மை, (!) எந்த மூலையில் ஓடையாய் போய் விட்டதெனக் கூற முடியுமா அல்லாடியார்? சரி (உடன்கட்டை ஏறுதல், தீண்டாமை, குழந்தைத் திருமணம், விதவைகள் மறுமணச் சட்டம், குறைந்த வயதுள்ள பெண்கள் விலக்கு மசோதா, பலதார மணத்தை உரிமைச் சட்டம், சாரதா சட்டம், ஹரிஜன் ஆலயப் பிரவேச மசோதா, பார்க்கப்போனால் இன்னும் பிற சமூக சீர்திருத்தச் சட்டங்கள் 1829 முதல் இதுகாலம் வரை ஒன்றின் பின் ஒன்றாகச் செய்யப்பட்டு வருகின்றனவே, இவைகளால் இந்து சமூகாயத்துக்கு என்ன கெடுதி வந்துவிட்டதென்று கேட்கிறோம் இருண்ட காலத்தின் துர்நாற்றத்தைப் போக்க மேற்போச்சாகச் செய்யப்படும் சீர்திருத்த வேலைகள் தாமேயிவை மேற்கண்ட சட்டங்களால்கெடாத இந்து மதம், இன்னுங் கூறப்போனால் ஓரளவு சுத்திகரிக்கப்பட்ட இந்து மதம் இன்றைய மசோதாவால் கெட்டொழிந்து போய் விடுமென அல்லாடியார்கள் கதறுவதில் அர்த்தமிருக்கமுடியுமா?

மக்களின் வாழ்க்கை முறைக்கு வழி காட்டிய சகல அறிவுடன் பட்ட பாதையில் அவர்கள் நடந்து செல்லத்தூண்டுகோலாயும் இருக்க வேண்டியதுதானே ஒரு மதத்தின் நேசமாக இருக்க முடியும். மதத்திற்கு மாசுக்கம் என்ற வொரு பெயர் இருப்பதின் உட்பொருளும் இதுவாகத்தானே இருக்கக்கூடும்! மக்களுக்குத் தானேமதம்! மதத்துக்கல்லவே மக்கள்! அப்படியிருக்க, காலத்துக்கேற்ப, அக்கோட்பாடுகள் மாறித்தானே தீரவேண்டும்! மாறுவிட்டால் மக்களே தங்கள் சொந்த வசதிகேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு நடக்கத்தானே முற்படுவர். இந்த 'அல்லாடியார் திருக்கூட்டம்' ஆணைபோடுதெப்படி நடமையும் நடமுறைக்கொத்ததுமாகும்?

சாஸ்திரமும் சம்பிரதாயமும், புராணமும் புரட்டும் ஆசி செய்த காலம் இனியும் ஆசி செய்ய முடியாது; இனிவந்து கொண்டிருப்பது மக்களாட்சிக் காலம். அறிவாராய்ச்சி அரியணை யேறப் போகும் காலம்! அல்லாடியார்கள் அடங்கிவிட வேண்டியதுதான்!

ஷேக் அப்துல்லாவைக் கொல்லச் சதி?

லண்டன், டிச. 15—

காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா லண்டனில் விமான மூலம் வந்து இறங்கியதும் இறங்காத முகமாக மிகவும் மோசமான மெ அலுவல்கள் இல்லாது உடனே காரில் ஏறிச் சென்றது அனைவர் கொன்றுவிட்டதாக வாசகமுகத்தில் காணப்பட்டதின் விளைவாக இருப்பதேன்று என்றதற்கின் இருந்து வருகின்றன.

எவ்வித ஆர்ப்பாட்டமின்றி அவர் ஓய்வெடுக்கவுக்குப் பயணப்பட்டார வேண்டும் என்று ஒரு விமான நிலைய அதிகாரி கூறியதாகச் சொல்லப்படுகிறது.

ஷேக் அப்துல்லாவுக்கு ஆபத்து ஏதும் நேர்க்கும் என்று சொல்லப்படுவதை இந்திய ஹைஸ் அதிகாரி ஒருவர் மறுத்தார். எவ்வித ஆபத்தும் அவருக்கு ஏற்படும் என்று தாங்கள் நினைக்கவில்லை என்றும் அவர் ஹோட்டலில் தங்கியிருக்கிறார் என்றும் அவர் பிரயாணத் திட்டப்படி வேல்ஸ் ஸைஃப் புறப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார். —ராய்ட்டர்

அறிவு நாட்குறிப்பு 1950

அண்ணனின் முவர்ணப் படத்துடன் கூடிய அட்டை! புதிய முறை! அழகிய பதிப்பு

பையிலடக்க அளவு

சென்னைப் பகுதிகள் விளக்கம் — மருத்துவ விடுதிகள் பஸ் வழி விளக்கம் முதலிய தகவுகள் அடங்கியது

விலை — இரண்டணைதான்

தேவைக்கு முந்துங்கள்!

அண்ணு நூல்கள்

அண்ணுவின் அறிவுரைகள்	...	0—3—0
அண்ணுவின் அறைகூவல்	...	0—3—0
அறிக்கையங்கள்	...	0—6—0
நூல்நிலையங்கள்	...	0—3—0
பொருள்	...	0—4—0
அறிஞர் அண்ணுத்துரை	...	1—4—0
மூலபலம் முறிகிறது	...	0—8—0
மகாகவி பாரதியார்	...	0—6—0
என்னைக் கவர்ந்த புத்தகங்கள்	...	0—2—0

நெடுஞ்செழியன்

மனப்போக்கு மாறவேண்டும்	...	0—2—0
புதிய பாதை	...	0—8—0
கம்பரும் வள்ளுவரும்	...	0—4—0
சமத்துவம்	...	0—2—0

விற்பனைக் கழிவு 25% செலவு இலவசம்

தனிப் பிரதிக்கு மூன்னம் அல்ல — நபர்களுக்கு அனுப்பவும்

முன்னேற்றப் பண்ணை, 2/12, பிராட்வே, சென்னை—1

வானொலி

(17-12-49 சனிக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். ஜானகி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 இளைப் பாட்டுகள் (இ.நி.)

பிற்பகல்:

1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 இளைப் பாட்டுகள் (இ.நி.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 நேயர் நிகழ்ச்சி

மாலை:

4-00 குழந்தைகளுக்கு (ஆங்கிலம்)
5-30 ராஜேஸ்வர் வேணு-வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 ஆர். நெல்லைத்தி—பாட்டு

இரவு:

7-00 ஹரே முத்தண்ணு—வயலின்
7-15 தமிழில் செய்திகள்
7-30 இளைப் பாட்டுகள்
7-45 விஸ்வநாதய்யர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலப் பேச்சு
9-30 ராஜலாபாலசர்மா (இ.நி.)
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எச். எஸ். கிருஷ்ணாராவ்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 என். மதாம்—வயலின்
8-30 பல்லவி (இசைத்தட்டு)

பிற்பகல்:

1-00 என். மதாம்—வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பல்லவி கதை (ஆங்கிலம்)

ஐ. நா. முடிவை ஆக்கிரமிக்கிறது இஸ்ரேல்!

டெல் அவிவ், டிச. 14—ஜெருசலத்தை சர்வதேசக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர, ஐ. நா. முடிவு செய்திருப்பதை மூடுக்கட்டைப்போட்டுத் தடுக்க, இஸ்ரேல் தன் தலைநகரை டெல்அவிவிலிருந்து, ஜெருசலத்திற்கு மாற்றுவது என்று இஸ்ரல் பார்லிமெண்ட் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

"மைலேடீஸ் கார்டன்" மூடப்படும்

சென்னை, டிச. 16—சென்னை பீபிள்ஸ் பார்க்கிலுள்ள 'மை டீஸ் கார்டன்" ஜனவரி 1-ந் தேதி முதல் தற்காலிகமாக மூடப்படும். பிப்ரவரியில் மீண்டும் திறக்கும் "ப்ளவர் ஷோ" விற்கான முன்னேற்பாடுகள் செய்வதற்காகவே மூடப்படுகிறதென அறிவிக்கப்படுகிறது.

3-00	தமிழில் செய்திகள்
3-10	பள்ளிக் கூடங்களுக்கு (ஆங்கிலம்)

இரவு:

5-00	எச். எஸ். கிருஷ்ணாராவ்—பாட்டு
5-30	கே. பி. தேவராஜ்—சாக்ஸபோன்
6-00	ஆங்கிலத்தில் செய்திகள்
6-15	தெரசாளம் (இசைத்தட்டு)
6-30	சோக நிகழ்ச்சிகள்

இரவு:

7-00	[illegible]
7-30	செய்தி விளக்கம்
7-45	சென்னையில் உள்ளபடி
8-00	ஆங்கிலத்தில் செய்திகள்
8-15	சென்னையில் உள்ளபடி
8-35	இசையே (இசைத்தட்டு)
9-00	முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.